1982 மார்ச் 2]

5. கவன ஈர்ப்புகள்.

(அ) இராயப்பேட்டை அரசு மருத்துவமனையிலுள்ள அற்வை சிகிச்சை நிலையங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே; ''சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனையில் இரண்டு அறுவை சிகிச்சை நிலையங்கள் இயங்காததால் நோயாளிகள் இன்னல் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் ஐந்து அறுவை அரங்கங்கள் இருக்கின்றன. 1981, ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மூன்று அறுவை அரங்கங்களில் டெட்டனஸ் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே 'ஏ' 'பி' 'சி' என்ற மூன்று அறுவை அரங்கங்களும் தற்காலிகமாக மூடப்பட்டது. இந்த டெட்டனஸ் எப்படி வந்தது என்பதையும் இதற்கான தடுப்பு நடவடிக்கை என்ன எடுக்கலாம் என்பதை கண்டறியவும் தலைமை அனதிஸ்ட் அவர்களை தலைவராகக் கொண்டும் ஏனைய மருத்துவர்களை உறுப்பினராகக் கொண்டும் ஒரு குழு அமைக்க கப்பட்டது. அக்குழு 26—12—1981 அன்று நடத்திய கூட்டத்தில் சரிவர வேலை செய்வதற்கான சூழ்நிலை மத்திய கிருமி அழிப்புத் துறை உட்பட பல இடங்களில் போதாமலிருக்கிறது எனவும் இதை தடுப்பதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைப்பற்றி யும் பரிந்துரை செய்தது. விளக்குப்பொருத்தின் மீது (Swap) ஸ்வாப் எடுத்துப் பார்த்ததில் டெட்டனஸ் இருந்தது என்று கண்டு பிடிக்கப்பட்டு அடிக்கடி அதனை சுத்தப்படுத்தி மேற்பார்வையிட அங்குள்ளசெவிலியர்களுக்கு அறிவுறுத்தல்கள்செய்யப்பட்டதுடன், அறுவை அரங்க ஒழுங்கு முறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தற்போது 'ஏ' அறுவை அரங்கம் தவிர மற்ற எல்லா அறுவை அரங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி மருத்துவமனையில் உள்ள 'ஏ' அறுவை அரங்கம் மட்டும் தற்போது வருடாந்திர மராமத்து வேலைகள் செய்யப்பட பொதுப்பணித்துறையினரிடம் கொடுக்கப் பட்டுள்ளது. அது 22—2—1982 முதல் மீண்டும் செயல்பட ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே; டெட்டனஸ் எனப்படுவது பொதுவாக எல்லா மருத்துவமனை களிலும் பரவலாக ஏற்படுகிறது. இதனுடைய காரணத்தை

அறிய அரசு என்ன திட்டம் வைத்துள்ளது? இதனால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பீதியைப் போக்கு வதற்கு அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, இந்த விஷ யத்தைப் பொறுத்தவரையில் எந்தவிதமான பீதியும் கிடையாது. ஏற்கெனவே சீப் அனெஸ்தெடிஸ்ட் என்ற ஒரு அதிகாரியை ஒரு குழுவுக்குத் தலைவராக நியமித்து எந்தக் காரணத்தால் இது ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய நியமித்து அந்தக் காரணங்களை நாம் அறிந்து புதிய நடவடிக்கைகளை எடுத்திருக் கிறோம். இப்பொழுது 5 ஆப்பரேஷன் தியேட்டர்களில், 4 ஆப்பரேஷன் தியேட்டர்கள்—

(1) ‘எ’

(2) ‘பி’

(3) ‘சி’

ஆகிய இந்த மூன்று ஆப்பரேஷன் தியேட்டர்களும், நான்காவதாக ஆக்சிடென்ட் ஆப்பரேஷன் தியேட்டர், லெப்ரசி ரீ-கன்ஸ்ட்ரக்டிவ் சர்ஜரி ஐந்தாவது ஆப்பரேஷன் தியேட்டர் ஆகியவை அங்கே இயங்குகின்றன. இதில் ‘எ’ தியேட்டர் பி. டபிள்யூ. டியின் கையில் ஒப்படைக்கப்பட்டு பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. இன்று காலையில் அதுவும் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தவைரவர்களே, மருததுவமனையிலே அறுவைச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் அறுவைச் சிகிச்சைக் கருவிகள், முறையாகத் தேவையான கருவி கள் பழுது பட்டிருப்பதின் காரணம் என்று தெரிகிறது டாக்டர்கள் அரசு விதிமுறைகளுக்கு மாறாக, அறுவைச் சிகிச்சை முறைகளுக்கு மாறி நடந்து கொண்ட காரணத்தால் இந்த வியாதி பரவியதாகக் கூறப்படுகிறது. ஆகவே, அவைகளைப் பழுது பார்க்க உடனடியாக ஆவன செய்யப்பட்டதா? இனிமேலாவது உடனடியாக ஆவன செய்யப்படுமா? அறுவை சிகிச்சை நிலையங் களில் குளிர் சாதனங்கள் பொருத்தப்படவில்லை என்று கூறப் படுகிறது, அது உண்மையா?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

(முற்பகல் 10-50)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த டெட்டனஸ் என்கிற நோய், ஒரு பல்பினுடைய ஹோல்டரிலே இருந்திருக்கிறது என்பதை ‘ஸ்வாப்ஸ்’ எடுத்து, பஞ்சை வைத்து, துடைத்து

1982 மார்ச் 2] [டாக்டர். எச். வி. ஹண்டே]

எடுத்து, ஆராய்ச்சி, செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள். இனிமேல் வராத வகையிலே எல்லாவற்றிற்கும் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறோம். ஆகவே, அதிலே எந்தவிதமான பிரச்சனையும் இல்லை. வேறு எந்தக் காரணமும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பகிறேன்.

4. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. துரைமுருகன் : இரண்டாவது கால் அட்டென்ஷனுக்கு போவதற்கு முன்னால், ஒரு சின்ன கால் அட்டென்ஷன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த மாதிரி கேட்க முடியாது. பின்னால், இதுவே ஒரு முன்மாதிரியாகி விடும்.

திரு. துரைமுருகன் : உறுப்பினர் சொன்னதிலோ, அமைச்சர் சொன்னதிலோ நான் கேள்வி கேட்கவில்லை, நான் கேட்பது வேறு பாயிண்ட் ஆஃப் ஆர்டர். இந்த மாமன்றத்தில் தலைவரிடத்திலே நான் ஒன்றைத் தெரிந்துகொள்ள விழைகிறேன். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, இரண்டுகட்சிகளைச் சேர்ந்தவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கின்றனர். எதிர்க்கட்சியிலே இருக்கிற நாங்கள் 4,5 கவனத் ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளோம். இந்த அவையிலே ஆளுநர் உரை ஆற்றுவதறகு முன்னரே கொடுத்துவிட்டோம். அவற்றையெல்லாம் திருப்பி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எழுதிக் கொடு என்று சொன்னார்கள். திருப்பியும் எழுதிக்கொடுத்தேன், இதுவரையில் எங்களுடைய எந்த கால் அட்டென்ஷனும் எடுக்கப்படவில்லையே, ஏன் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறையிலே வந்து கேளுங்கள்.